தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பாசனத்துக்காக வீராணம் ஏரியில் இருந்து நாளை முதல் தண்ணீர் திறப்பு

வீராணம் ஏரியில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (செப்.21) முதல் பாசனத்துக்காகத் தண்ணீர் திறந்துவிட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்து வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு: கடலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள பாசனப் பகுதிகளுக்கு சாகுபடிக்காக கீழணை, வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் திறந்துவிடுமாறு விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. அவர்களது வேண்டுகோளை ஏற்று கீழணை, வீராணம் ஏரியிலிருந்து சாகுபடிக்காக வரும் ஞாயிற்றுக்கிழமை முதல் தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டுள்ளேன். இதனால் கடலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 903 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

### பருத்திச் செடியிலிருந்து பஞ்செடுக்கும் இயந்திரம் அறிமுகம்

பருத்திச் செடியிலிருந்து பஞ்செடுக்கும் இயந்திரம் கோவையில் வியாழக்கிழமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்பாக சைமா தலைவர் டி.ராஜ்குமார் கோவை நிருபர்களிடம் வியாழக்கிழமை கூறியது: கோவை தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கத்தின் அங்கமான சைமா பருத்தி மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி சங்கத்தின் சார்பில் கடந்த சில ஆண்டுகளாக பருத்திச் செடியிலிருந்து பஞ்செடுக்கும் இயந்திரம் தொடர்பான ஆராய்ச்சிகள் நடைபெற்றன. இந்த இயந்திரம் சூரிய ஒளியில் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பருத்திச் செடியில் இருந்து ஒரு ஆள் ஒரு நாளில் 8 மணி நேரத்தில் 10 கிலோ பஞ்சை செடியில் இருந்து பிடுங்க முடியும். ஆனால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த இயந்திரத்தின் மூலம் ஒரு மணி நேரத்தில் 10 கிலோ பஞ்சை செடியிலிருந்து பிடுங்க முடியும். இயந்திரத்தின் மற்றொரு பகுதியில் இணைக்கப்பட்ட பைகளில் பஞ்சு

சேகரிக்கப்படுகிறது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த இயந்திரத்தின் விலை ரூ.20 முதல் ரூ.25 ஆயிரம் வரை இருக்கும். இதில் பொருத்தப்பட்டுள்ள எல்.இ.டி. விளக்கு மூலம் இரவிலும் இயந்திரத்தைப் பயன்படுத்த முடியும். இந்த இயந்திரத்தின் மூலம் விவசாயிகளுக்கு அதிக அளவில் கூலி மிச்சமாகும். சைமாவின் ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளிட்ட இடங்களிலும் விவசாயப் பொருள்காட்சி நடைபெறும் இடங்களிலும் இந்த இயந்திரத்தின் பயன் தொடர்பாக விளக்கம் அளிக்கப்படும் என்றார்.

## அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பத்தால் கூடுதல் லாபம்: வேளாண் அதிகாரிகள் தகவல்

விவசாயிகள் அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலமாக கூடுதல் லாபத்தைப் பெறமுடியுமென வேளாண்மைத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வெள்ளக் கோவில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் அரசின் வேளாண்மைத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் விவசாயிகளுக்கான நவீன தொழில்நுட்ப பயிற்சி வகுப்பு வெள்ளிக்கிழமை நடைபெற்றது. காங்கயம், வேளாண் வணிகத் துறை அலுவலர் மணிவேல்முருகன், வெள்ளக்கோவில் ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகுடேஸ்வரன், அக்மார்க் அலுவலர் லீலாவதி ஆகியோர் பங்கேற்று பேசினர்.இதில், நெல், கம்பு, சோளம், ராகி, மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயிறு, துவரை, தட்டப்பயிறு, நிலக்கடலை, எள், சூரியகாந்தி, மிளகாய், பருத்தி, மஞ்சள் ஆகிய அதிக மதிப்புடைய விளை பொருள்களுக்கு அவற்றின் தரத்தைப் பொருத்து விலை கிடைக்கிறது. உரிய காலத்தில் அறுவடை, சுத்தமான சேமிப்பு, சரியான ஈரப்பதம், ரகம் வாரியான தரம் என விற்பனைக்குக் கொண்டு வந்தால் நல்ல விலை கிடைக்கும். விவசாயம் சாராத பொருள்களை தேவைக்கேற்ப ஆண்டு முழுவதும் கூட்டியோ, குறைத்தோ உற்பத்தி செய்து கொள்ளலாம். ஆனால், விவசாய விளை பொருள்களின் உற்பத்தி ஓராண்டில் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் மட்டுமே கிடைக்கும்.

மக்கள் பெருக்கத்திக்கேற்ப ஆண்டு முழுவதும் உணவுக்காக விவசாயப் பொருள்கள் தேவைப்படுவதால், அவற்றைச் சேமித்து வைத்து விற்பனை

செய்தால் நல்ல லாபம் கிடைக்கும். தற்போதுள்ள நவீன தொழில்நுட்ப வசதிகளை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## <u>உயிர் உரங்கள் விழிப்புணர்வு முகாம்</u>

ஆதிபராசக்தி வேளாண் கல்லூரி மாணவர்கள் சார்பில், ஆரணியை அடுத்த குண்ணத்தூரில் உயிர் உரங்கள் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. முகாமுக்கு ஊராட்சி மன்றத் தலைவர் உஷா பார்த்தீபன் தலைமை தாங்கினார். கல்லூரி மாணவர்கள் வெங்கடேஷ் வரன், வினோத்குமார், யோகானந்தம், விக்னேஷ்ராஜா, வெற்றிவேல், முன்னோடி விவசாயி மாமது உள்ளிட்டோர் பேசினர். இதையடுத்து, மாணவர்கள் தயாரித்த இயற்கை விவசாயம் குறித்த கையேடுகள் வழங்கப்பட்டன.

## <u>கோழி வளர்ப்புத் திட்டத்துக்கு 50% மானியத்தில் ரூ. 1.8 கோடி அளிப்பு'</u>

கரூர் மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டத்துக்கு கடந்த 2 ஆண்டுகளில் 50 சதவீத மானியத்தில் ரூ. 1.8 கோடி வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தெரிவித்தார். கரூர் மாவட்டம், க. பரமத்தி ஒன்றியப் பகுதியில் கஸ்தூரிபாளையம் ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் கோழி வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனை வெள்ளிக்கிழமை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி கூறியது: கரூர் மாவட்டத்தில் கோழி வளர்ப்புத் திட்டம், கால்நடை பராமரிப்புத்துறை மூலம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்தத் தொழிலுக்கு தமிழக அரசின் மூலம் 25% மானியமும், தேசிய வேளாண் வங்கிகள் மூலம் 25% மானியம் என மொத்தம் 50% மானியத்தில் கடனுதவி வழங்கப்பட்டு வருகின்றன. லாபகரமான இத்தொழிலை இணைத் தொழிலாளாகவும் பயனாளிகள் அமைத்து பயன்பெறலாம். குறிப்பாக, விவசாயிகள் தங்கள் நிலங்களில் ஒரு பகுதியை ஒதுக்கீடு செய்து கோழி வளர்ப்பு மையம் உருவாக்கலாம். இதேபோல, கறவை மாடு, ஆடு வளர்ப்பவர்கள் வீடு அருகாமையில் உள்ள காலியிடங்களை தேர்வு செய்து அதில் கோழி வளர்ப்பு மையம் உருவாக்கலாம். கரூர் மாவட்டத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு முதல் கட்டமாக 2012-13 ஆம் ஆண்டில் 45

பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

**குடுமியான்மலையில் உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கு பயிற்சி**

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கான பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது. பயிற்சிக்கு வேளாண்மை இணை இயக்குநர் கே.எம். ஷாஜஹான் தலைமை வகித்துப் பேசுகையில், உழவர் மன்ற அமைப்பாளர்கள் தங்கள் பகுதியிலுள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து விவசாயிகள் உற்பத்தியாளர் அமைப்பை ஏற்படுத்தி அதன்மூலம் தரமான இடுபொருட்களை குறைந்த விலையில் பெற்று, விளைபொருட்களை நல்ல விலைக்குச் சந்தைப்படுத்தி கூடுதல் லாபம் பெறலாம் என்றார். பயிற்சியில் நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி அதிகாரி சோமசுந்தரம், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் வ. சாந்தி, வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத் துறைத் துணை இயக்குநர் எஸ். முகமது அப்துல் நசீர் ஆகியோர் பேசினர். பயிற்சியில் கலந்துகொண்ட உழவர் மன்ற அமைப்பாளர்களுக்கு இரண்டாம் காலாண்டுக்கான உழவர் நண்பன் எனும் தொழில்நுட்பக் கையேடு மற்றும் பயிற்சி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.பயிற்சியளிக்கப்பட்டு, 50 சதவீத மானியத்தில் கடன் வழங்கப்பட்டன. இதில் 35 பேருக்கு நாட்டுக்கோழி வளர்க்க ரூ. 12 லட்சமும், 10 பேருக்கு கறிக்கோழிப்பண்ணை அமைக்க ரூ. 20.62 லட்சமும் என மொத்தம் ரூ. 32.62 லட்சமும் கடனுதவி வழங்கப்பட்டன. 2013-14 ஆம் ஆண்டில் 44 பேருக்கு ரூ. 15 லட்சத்தில் நாட்டுக்கோழிப் பண்ணை அமைக்கவும், 30 பேருக்கு ரூ. 61 லட்சத்தில் கறிக்கோழிப்பண்ணை அமைக்கவும் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளன. 2014-15 ஆம் ஆண்டில் ரூ. 60.12 லட்சம் வரை நிதி ஒதுக்கீடு பெற்று பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர் என்றார். ஆய்வின்போது, கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் தங்கராஜ், உதவி இயக்குநர் குழந்தைசாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## விவசாயிகளுக்குப் பயிற்சி

நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு சந்தை விரிவாக்கப் பயிற்சி வியாழக்கிழமை நடைபெற்றது. பயிற்சியை நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் க. சோழன் தொடங்கிவைத்தார். பயிற்சியில் முனைவர் க.ஞா. கவிதாஸ்ரீ வேளாண் சார்ந்த உற்பத்தி பொருள்களை சந்தைபடுத்துதல் மூலம் அதிக வருவாய் பெறுவது குறித்து விளக்கினார். காய்கறி பயிர்களை துல்லிய பண்ணையம் மூலம் உரிய பருவத்தில் சாகுபடி செய்து அதிக விளைச்சல் பெறும் வழிகள், சூடோமோனஸ் என்ற எதிர் உயிர்கொல்லி மருந்தை சுலபமான முறையில் தயார் செய்வது, அதை எளிய முறையில் சந்தைப்படுத்தி வருவாய் ஈட்டுவது பற்றியும் செயல்விளக்கம் செய்து காட்டப்பட்டது. மேலும் அரிசி, சிறு தானியங்களிலிருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களான பொறி, அவல், இட்லி, தோசை, வடகம், இடியாப்பம் மற்றும் உடனடி உணவுப் பொருள்கள் தயாரிக்கும் முறைகள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. பயிற்சியில் நிலைய இணைப் பேராசிரியர் முனைவர் த. தாமோதரன், உதவிப் பேராசிரியர்கள் முனைவர் வெ. சிவக்குமார், முனைவர் ராஜா. ரமேஷ் ஆகியோர் தொழில்நுட்ப பயிற்சி அளித்தனர். திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாய மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். நிலுவைத் தொகை வழங்காத சர்க்கரை ஆலைகள் மீது சட்ட நடவடிக்கை

**<u>கரும்பு விவசாயிகளுக்கு மூன்று நாள்களுக்குள் நிலுவைத் தொகையை தனியார் சர்க்கரை ஆலைகள் வழங்காவிடில் சட்ட நடவடிக்கை</u>** எடுக்கப்படும் என்று விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. பிருந்தாதேவி எச்சரித்தார். விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம், வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தலைமை வகித்தார். கூட்டத்தில் பேசிய விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பலர், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு உரிய நிலுவைத் தொகையை வழங்காமல் பாக்கி வைத்திருப்பது குறித்து கேள்வி எழுப்பினர். விக்கிரவாண்டி கம்யூனிஸ்ட் எம்எல்ஏ ராமமூர்த்தி தலைமையில்

வந்திருந்த சில விவசாயிகளும் இக் கோரிக்கைகளை வலியுறுத்தினர். கரும்பு விவசாயிகள் வெளிநடப்பு: இந் நிலையில் கரும்பு விவசாய சங்கங்களின் தலைவர்கள் மற்றும் விவசாயிகள் தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்புக்கு அரசு அறிவித்த விலையை வழங்காமல் பாக்கி வைத்திருப்பதை கண்டித்து குறைகேட்புக் கூட்டத்தை புறக்கணித்து விட்டு வெளிநடப்பு செய்தனர். விக்கிரவாண்டி எம்எல்ஏ ராமமூர்த்தி தலைமையில் வந்திருந்த விவசாயிகளும் இக் கூட்டத்தை புறக்கணித்து வெளிநடப்பில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் மத்தியில் பேசிய மாவட்ட வருவாய் அலுவலர் இரா.பிருந்தாதேவி, அரசு ஆணைப்படி கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகையை உடனே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செயல்படாத ஆலையின் மீது சர்க்கரைத் துறை ஆணையருடன் கலந்து ஆலோசித்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். கூட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கோ.ராதா, வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) ரத்தினசபாபதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) வி.ஆறுமுகம், விழுப்புரம் செயற்பொறியாளர் (தமிழ்நாடு மின்சார வாரியம்) அசோகன், கள்ளக்குறிச்சி செயற்பொறியாளர் (பொறுப்பு) அருட்பெருஞ்சோதி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ஆர்.கே.சந்திரசேகரன், மண்டல கால்நடை இணை இயக்குநர் அப்சல் உள்பட 150-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மாவட்டம் முழுவதும் கோமாரி நோய் தடுப்பு சிறப்பு முகாம் நீட்டிப்பு**

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில், கோமாரி நோய் தடுப்பு முகாம்கள் மேலும் ஒரு வார காலத்துக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, மாவட்ட கலெக்டர் விவேகானந்தன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தர்மபுரி மாவட்டத்தில் 3,59,100 கால்நடைகள் உள்ளன. இந்த கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுக்க முன்னெச்சரிக்கையாக முகாம்கள் அமைக்கப்பட்டு, தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் கடந்த 1ம் தேதி முதல் 21ம் தேதி வரை கோமாரி நோய் தடுப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இந்த முகாம்களில் இது வரை 2,68,250 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளன.விடுபட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போட, இந்த முகாம் வரும் 22ம் தேதி முதல் மேலும் ஒரு வாரத்துக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே, தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தங்களது கால்நடைகளுக்கு தவறாமல் தடுப்பூசி போட்டு பயனடைய வேண்டும். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**பயிர்களில் பூச்சி கட்டுப்படுத்த மருந்து தயாரிக்கும் பயிற்சி**

நீடாமங்கலம், : நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உயிரியல் முறையில் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மைக்கு பயன்படும் உயிர் எதிர்க்கொல்லிகள் தயாரிப்பு முறைகள் மற்றும் சூடோமோனஸ் ப்ளோரசன்ஸ் உற்பத்தி பயிற்சி முகாம் நடந்தது. நிலைய தலைவர் சோழன் தலைமை வகித்தார். கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் ராமராஜ் கலந்து கொண்டு பயிற்சியை தொடங்கி வைத்து மகளிர் குழுக்களுக்கு

சூடோமோனஸ் ப்ளோரசன்ஸ் தயாரிப்பது பற்றி செயல் விளக்கம் அளித்தார். உயிர் கொல்லிகள் தயாரிப்பு முறைகள் பற்றி உதவி பேராசிரியர்கள் சித்ரா, ரமேஷ் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

**கரூர் மாவட்டத்தில் சம்பாவில் 10ஆயிரம் எக்டேரில் திருந்திய நெல் சாகுபடி கலெக்டர் தகவல்**

கரூர், . கரூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா பட்டத்தில் 14ஆயிரத்து 400 எக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்படவுள்ளதாகவும், இதில் 10ஆயிரம் எக்டேரில் திருந்திய முறையில் பயிரிடப்படவுள்ளதாகவும் கலெக்டர் தெரிவித்தார். கரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று கலெக்டர் ஜெயந்தி தலைமையில் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் அருணா, வேளாண் இணை இயக்குனர் தெய்வேந்திரன், கூட்டுறவு இணைப் பதிவாளர் சந்தானம், முன்னிலை வகித்தனர். விவசாயிகளின் கேள்விகளுக்கு பதில் அளித்து கலெக்டர் பேசியதாவது: கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 652.2 மிமீ. செப்டம்பர் மாதம் வரை கிடைக்க வேண்டிய சராசரி மழையான 364.7 மிமீக்கு இதுவரை 215.3 மிமீ மழை மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளது. அதாவது சராசரி மழையளவை காட்டிலும், 41சதம் குறைவாகவே பெறப்பட்டுள்ளது. வாய்க்கால் மற்றும் கிணற்றுப் பாசனத்தைக் கொண்டு சம்பா பருவ நெல் சாகுபடிக்கு நாற்று விடப்பட்டு வளர்ச்சி நிலையில் உள்ளது. அக்டோபர் மாத இறுதிக்குள் 14ஆயிரத்து 400 எக்டேர் பரப்பில் சம்பா பருவ நெல் சாகுபடிக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றில் சுமார் 10ஆயிரம் எக்டேரில் திருந்திய நெல் சாகுபடி முறையில் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. அனைத்து வேளாண்மை வரிவாக்க மையங்களிலும் இதுவரை 115டன் சான்று பெற்ற நெல் விதைகள் மானியத்தில் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இயந்திர நடவு மூலம் திருந்திய நெல் சாகுபடி மேற்கொள்ள செயல்விளக்க திடல்கள் அமைக்க எக்டேருக்கு ரூ.1500 மானியத்தில் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. நடப்பு வருடத்தில் 600 எக்டேரில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. சிறுதானிய உற்பத்தியை பெருக்கிட விதை கிராமத்திட்டத்தில் 50சதம் மானியத்தில் சான்று பெற்ற சிறுதானிய

விதைகள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும் 5ஆயிரம் எக்டேரில் சோளம் செயல்விளக்கத் திடல்கள் அமைக்க எக்டேருக்கு ரூ.3200 மானியத்தில் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. பயறு இயக்கதிட்டத்தில் துவரை நாற்றுவிட்டு நடுவதற்காக எக்டேருக்கு ரூ.7500 மானியத்தில் இடுபொருட்கள் வழங்கி 150 எக்டேரில் செய ல்விளக்க திடல்கள் அமை க்கவும் மற்றும் 250 எக் டேரில் பின்முடிவு மானியத்தில் துவரை நடவு செய ல்விளக்கத் திடல்கள் அமை க்கப்பட்டும் வருகிறது. தோட்டக்கலைத்துறை மூலம் உயர் தொழில்நுட்ப உற்பத்திப் பெருக்கு திட்டத்தில் மா. எலுமிச்சை, கொய்யா, போன்ற பழக்கன்றுகளை சாதாரண முறையிலும், அடர்நடவு முறையிலும் நடவு செய்து, புதிய தொழில்நுட்பம் மூலம் உற்பத்தியை பெருக்கும் பொருட்டு நடவுபொருட்கள் மற்றும் இடுபொருட்கள் 54எக்டேர் பரப்பிற்கு வழங்க ரூ.12.84 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மேலும் காய்கறிகள், மஞ்சள், மிளகாய், கோகா, மலர்பயிர்கள் சாகுபடி பரப்பை அதிகரிக்க 70எக்டேர் பரப்புக்கு ரூ.51.30 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப் பட்டுள்ளது. தேசிய மூலிகைப்பயிர் திட்டத்தில் மூலிகைப்பயிர்கள் சாகுபடி பரப்பினை அதிகரிக்க 79எக்டேர் பரப்பில் மூலிகைபயிர்கள் சாகுபடிசெய்ய ரூ.42.72லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்களில் பயன்பெற விரும்பும் விவசாயிகள், தங்களது சிட்டா, அடங்கல், நிலத்தின்வரைபடம், ரேசன்கார்டு ஜெராக்ஸ், விண்ணப்பதாரரின் 3 புகைப்படங்களுடன் சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனரை அணுகி பயன்பெறலாம் இவ்வாறு கலெக்டர் பேசினார்.

## சிறு, குறு விவசாயிகளுக்கு துவரை நடவு திட்டம்

திருப்பூர், : அவிநாசி வட்டாரத்தில் செயல்படுத்தப்பட உள்ள துவரை நடவு திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுமாறு சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண்துறை சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.இதுதொடர்பாக அவிநாசி வேளாண்மை உதவி இயக்குநர் சிவக்குமார் விடுத்துள்ள அறிக்கையில், அவிநாசி வட்டாரத்தில் தேசிய பயிறு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஹெக்டர் ஒன்றுக்கு ரூ.7,500 மானியத்தில் 133 ஹெக்டர் பரப்பளவிற்கு நடவுத்திட்டம்

செயல்படுத்தப்பட உள்ளது. துவரை சாகுபடியில் 5க்கு 3 அடி இடைவெளியில் வரிசையாக நடவு மேற்கொள்வது ஆகும். இதற்கு குழித்தட்டுகளில் ஒரு ஹெக்டரில் 6250 செடிகள் வளர்க்கப்பட்டு 15ம் நாளில் வரிசைக்கு வரிசை 5 அடியும் செடிக்கு செடி 3 அடி இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். இதனால் பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்படுவதுடன் போதிய இடைவெளி கிடைக்கும் இதன்மூலம் அதிக சூரிய வெளிச்சம் மற்றும் காற்றோட்டம் கிடைக்கும். துவரை நடவு செய்வதுடன் நீர்பாய்ச்ச வேண் டும். சொட்டு நீர் பாசனம் செய்வதன் மூலம் அதிக பரப்பில் சாகுபடி செய்ய லாம். மண்ணின் ஈரப்பதத்திற்கு ஏற்ப மூன்று அல்லது நான்கு முறை பாசனம் செய்ய வேண்டும். 30 முதல் 40 நாட்கள் களை இன்றி பராமரிக்க வேண் டும். துவரை பயிருக்கு சாம்பல் சத்து தரும் வகையில் டிஏபி 50 கிலோ, எம்.ஓ.பி 85 கிலோ, நுண் ணூட்டச்சத்து 10 கிலோ உரம் இட வேண்டும். நடவு செய்த 30 நாளில் நுனி கிள்ளி விட வேண்டும். இதனால் அதிகமாக கிளைகள் உண்டாகி மகசூல் அதிகரிக்கும். பூக்கும் பருவத்தில் வளர்ச்சி ஊக்கி தெளிப்பதனால் பூ உதிர்வதை தடுக்கலாம். காய்கள் 80 சதவீதம் முற்றியவுடன் பயிர் அறுவடை செய்து காய வைத்து பின்பு தானியங்களை பிரித்து எடுக்கலாம். விதைகளை சுத்தம் செய்து காயவைத்து பின்னர் சேமிக்கலாம். இவ்வகையான முறையில் ஏக்கருக்கு 1000 முதல் 1200 கிலோ மகசூல் கிடைக்கும். இத்திட்டத்தில் பங்குபெற உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் பதிவு செய்து கொள்ளலாம். முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கென சிட்டா, அடங்கல் மற்றும் ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு அவசியமாகும். மேலும் விபரங்களுக்கு தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரை தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## சம்பா நெல் சாகுபடியில் பூச்சி, நோய்த் தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி? வம்பனில் 23ம் தேதி சிறப்பு பயிற்சி முகாம்

ஆலங்குடி, : புதுக் கோட்டை மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடியில் பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி? என்பது குறித்த சிறப்பு பயிற்சி முகாம் ஆலங்குடி அடுத்த வம்பனில்

இயங்கி வரும் வேளாண் அறிவியல் மையத்தில் 23ம் தேதி நடைபெற உள்ளதாக அதன் தலைவர் ஞானமலர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, மணமேல்குடி, ஆவுடையார்கோவில், கந்தர்வகோட்டை மற்றும் ஆலங்குடி வட்டாரங்களில் பரவலாக சம்பா பருவத்தில் நெல் பயிரிடப்படுகிறது.நெல்லில் மகசூல் குறைவதற்கு பல்வேறு வகையான காரணங்கள் உள்ளன. குறிப்பாக பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல் காரணமாக சுமார் 30 சதவீத மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இப்பூச்சி மற்றும் நோய்களின் தாக்குதலின் அறிகுறிகள், இவற்றின் வாழ்க்கைச் சுழற்சி, காலநிலை மாற்றத்தால் இவற்றில் ஏற்படும் மாறுதல்களைத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். இந்த சம்பா பருவத்தில் நெல்லைத் தாக்கக்கூடிய முக்கியமான பூச்சிகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்த சிறப்பு பயிற்சி முகாம் வம்பன் வேளாண் அறிவியல் மையத்தில் 23ம் தேதி நடைபெறுகிறது. எனவே, இதில் விவசாயிகள் தவறாமல் கலந்துகொண்டு பயன் பெற வேண்டும். மேலும், விவரங்களை 04322 290321 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு தெரிந்துகொள்ளலாம் என்றார்.

## <u>விவசாய கண்காட்சி</u>

கொள்ளிடம், : நாகை மாவட்டம் கொள்ளிடம் அருகே உள்ள புத்தூரில், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்புல இறுதியாண்டு ஆறாம் குழுவைச் சேர்ந்த மாணவிகள் மற்றும் புத்தூர் ஊராட்சிமன்றம் சார்பில் விவசாய கண்காட்சி நடத்தப்பட்டது. ஊராட்சிமன்ற தலைவர் அப்துல்மாலிக் தலைமை வகித்தார். மாணவிகள் குழுத்தலைவி இலக்கியா வரவேற்றார். கொள்ளிடம் வேளாண் உதவி இயக்குநர் பால்ராஜ், வேளாண் அலுவலர் சதீஷ்குமார் முன்னிலை வகித்தனர். வேளாண் உதவி பேராசிரியர் சண்முகராஜா விவசாய கண்காட்சியை துவக்கி வைத்தார். கண்காட்சியில், சொட்டுநீர் பாசனம், ஆற்றங்கரையோர பயிர்சாகுபடி, தண்ணீர் சிக்கனமாக பயன்படுத்தும் முறை, மலைப்பகுதியில் தோட்டப்பயிர் சாகுபடி, ஊடுபயிர்சாகுபடி குறித்த மாணவிகளின் படைப்புகள் கண்காட்சியில் இடம் பெற்றன. பேராசிரியர் முத்துக்குமார், வேளாண் விரிவாக்க அலுவலர்கள்

ராமச்சந்திரன், மகேஷ், ஊராட்சி செயலாளர் ஸ்ரீதர், முன்னாள் ஊராட்சிமன்ற தலைவர் முருகேசன், ஊர் நாட்டாண்மை சுப்பிரமணியன், விவசாயிகள் ரவி, ஞானசேகரன், சபாபதி, சிவக்குமார், மகேந்திரன், மனோஜ்ராஜ், கார்த்தி, கிருபாகரன் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர். முடிவில் மாணவி கீதாஞ்சலி நன்றி கூறினார்.

**<u>நவீன தொழில் நுட்பத்தில் கத்தரி, மிளகாய் சாகுபடிக்கு இலவசப் பயிற்சி</u>**

நாமக்கல், : கத்தரி, தக்காளி, மிளகாய் சாகுபடி க்கான நவீன தொழில்நுட்ப ங்கள் குறித்த இலவசப் பயிற்சி நாமக்கல் வேளாண் அ றிவியல் நிலையத்தில் வ ரும் 23ம் தேதி காலை 10 மணிக்கு நடக்கிறது.இதில் கத்தரி, தக்காளி, மிளகாயில் உள்ள வீரிய ஒட்டு ரகங்கள், குழித்தட்டு முறையில் நாற்று உற் பத்தி, இரட்டை வரிசை நட வு முறை, பயிர் இடைவெளி, சொட்டு நீர்ப்பாசனம் அளிக்கும் முறைகள், நீர் வழி உரமிடல், குறித்து பயி ற்சி அளிக்கப்படுகிறது.விருப் பம் உள்ளவர்கள், வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 22ம் தேதி க்குள் பெ யரை முன் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலு ம் விவரங்களுக்கு 0428- 6266345 என்ற எண் ணில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>அவல்பூந்துறையில் கொப்பரை ஏலம்:825 மூட்டைகள் விற்பனைக்கு வரத்து</u>**

ஈரோடு:அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், நடந்த கொப்பரை ஏலத்தில், 825 மூட்டைகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன.தமிழகத்தில் காங்கேயம், பொள்ளாச்சி மற்றும் உடுமலைப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில், தென்னை மரங்கள் அதிகம்.மூன்று ஆண்டு:இருப்பினும், கடந்த, மூன்று ஆண்டாக அனைத்து பகுதிகளிலும், கடும் வறட்சி நிலவியதால், கொப்பரை

உற்பத்தி வெகுவாக குறைந்து, அவல்பூந்துறை கொப்பரை ஏலச்சந்தைக்கு, 4,000 முதல், 5,000 மூட்டை தேங்காய் கொப்பரை ஏலத்துக்கு வந்த நிலையில், தற்போது அதிகபட்சமாக, 1,000 மூட்டைகளை தாண்டுவதில்லை.கடந்த வாரம் சந்தைக்கு, 950 மூட்டை கொப்பரை விற்பனைக்காக கொண்டு வரப்பட்ட நிலையில், இந்த வாரம், 825 மூட்டை மட்டுமே வரத்தானது.இதுபற்றி, அவல்பூந்துறை ஏலச்சந்தை, கண்காணிப்பாளர் அர்ஜுனன் கூறியதாவது:ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டத்தில், காங்கேயம், வெள்ளகோவில், எழுமாத்துார் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், கொப்பரை ஏலம் நடக்கிறது.முதல் ரகம்:இருப்பினும், அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்தில் நல்ல விலை கிடைப்பதால், ஈரோடு மட்டுமின்றி, கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், கோவை என, பல மாவட்ட விவசாயிகள், இங்கு விற்பனைக்காக கொப்பரை மூட்டைகளை எடுத்து வருகின்றனர்.முதல் ரக கொப்பரை அதிகபட்சமாக, 102 முதல், 107 ரூபாய்க்கும், இரண்டாவது ரகம், 97 முதல், 100 ரூபாய்க்கும் விற்பனையானது.இவ்வாறு, அவர் கூறினார்.

## கோமாரி நோய் முகாம்

திண்டிவனம்; நொளம்பூரில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. திண்டிவனம் அடுத்த நொளம்பூர் கிராமத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் இரண்டு நாள் முகாம் நேற்று துவங்கியது. ஊராட்சி தலைவர் பாண்டியன் தலைமை தாங்கினார். கால் நடை மருத்துவர் செல்வராஜ் தலைமையிலான மருத்துவ குழுவினர், கிராமத்தில் உள்ள நூறுக்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போட்டனர். ஊராட்சி துணை தலைவர் குமார் நன்றி கூறினார். இக்கிராமத்தில் கடந்த 2012ம் ஆண்டு ஆந்த்ராக்ஸ் நோயால் ஏராளமான ஆடு, மாடுகள் இறந்தது குறிப்பிடதக்கது.

## கருணை கிழங்கு பயிரிடுவதில் விவசாயிகள் அதிக ஆர்வம்

சங்கராபுரம்; சங்கராபுரம் பகுதியில் கருணை கிழங்கு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். சங்கராபுரம் அடுத்த புதுபாலப்பட்டு, பழையபாலப்பட்டு, அரசம்பட்டு, நெடுமானூர், லக்கினாய் கன்பட்டி, புளியங்கோட்டை கிராமங்களில் விவசாயிகள் கருணை கிழங்கு சாகுபடி செய்துள்ளனர். சங்கராபுரம் பகுதி கிராமங்களில் அறுவடை செய்யும் கருணை கிழங்கினை சென்னை கோயம் பேடு, வேலூர், சேலம், திருவண்ணாமலை, பெங்களூரு வியாபாரிகள் வந்து வாங்கிச் செல்கின்றனர். கடந்த காலங்களில் கருணை கிழங்கு கிலோ 15 ருபாய்க்கு விற்றது. இந்த ஆண்டு கடந்த ஆண்டை விட அதிக விலை விற்கும் என்ற நம்பிக்கையில் சங்கராபுரம் பகுதியில் விவசாயிகள் அதிக அளவில் கருணை கிழங்கு பயிர் செய்துள்ளனர்.

## ஈரோடு மாட்டுச்சந்தை 90 சதவீதம் மாடு விற்பனை

ஈரோடு :ஈரோடு மாட்டுசந்தையில், விற்பனைக்கு கொண்டு வரப்பட்ட, 450 பசுமாடு, 350 எருமையினங்களில், 90 சதவீதம் விற்பனை யானது.ஈரோடு, கருங்கல்பாளையத்தில் நடக்கும், வாராந்திர மாட்டுச்சந்தையில், புதன் கிழமை அடி மாட்டுச்சந்தையும், வியாழக்கிழமை கறவை மாட்டுச்சந்தையும், நடக்கிறது.ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் இருந்தும், திருவண்ணாமலை, சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி உள்ளிட்ட தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பசுமாடுகள், எருமையினங்கள், இங்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. ஜெர்சி, சிந்து, சோலை, சிந்து கலப்பினம், முறா, ஹெச்.எஃப்., மற்றும் எருமையினங்கள், இங்கு விற்பனைக்கு கொண்டு வரப்படு கின்றன.விவசாயிகள், மாடு வளர்ப்போர் பெரும்பாலும், உள்ளூர் சந்தையில் இருந்தும், வியாபாரிகள் மகாராஷ்டிரா, கேரளா, கர்நாடகா மற்றும் ஆந்திரா போன்ற பகுதிகளில் இருந்தும் வந்து, வாங்கி செல்கின்றனர்.இதுகுறித்து, சந்தை மேலாளர் முருகன்

கூறியதாவது:சந்தைக்கு, கடந்த சில மாதங்களாகவே, மாட்டினங்கள், எருமையினங்கள், வரத்து அதிகரித்துள்ளது.கடந்த வாரம், 500 பசுயினங்கள், 350 எருமை என, 900 கால்நடையினங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்ட நிலையில், இந்த வாரம், 800 ஆக குறைந்துள்ளது. ஆனால், இதில், 90 சதவீதத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் விற்பனையாகின.சந்தைக்கு வரும் கால்நடையினங்கள் மூலம், மற்றவைகளுக்கு நோய் தாக்குதலை தவிர்க்கும் வகையில், வாகனத்தில் இருந்து, அவை இறக்கப்படும்போதே, கால்நடை மருத்துவர்கள் அடங்கிய குழு மூலம், முறையாக பரிசோதிக்கப்படுகின்றன.சந்தை நடக்கும் பகுதியை சுற்றியுள்ள கிருஷ்ணம்பாளையம், கருங்கல்பாளையம், வைராபாளையம் மற்றும் பள்ளிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## <u>மேரக்காய் விவசாயத்தில் ஆர்வம்</u>

மஞ்சூர்: மஞ்சூர் விவசாயிகள் மேரக்காய் விவசாயத்தில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மஞ்சூர் சுற்றுவட்டாரத்தில் பெரும்பாலும் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேயிலை தொழிலில் ஏற்பட்டு வரும் பல்வேறு பிரச்னைகளால் சில இடங்களில் மலை காய்கறி விவசாயம் செய்து வருகின்றனர். இந்நிலையில், மஞ்சூர் அடுத்துள்ள தொட்டணி பகுதியில் பல ஏக்கரில் மேரக்காய் விவசாயம் பயிர் செய்யப்பட்டுள்ளது. இதில், விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். விவசாயி ரங்கன் கூறுகையில்,""மலை காய்கறி விவசாயம் ஒருபுறம் நடந்து வந்தாலும், மேரக்காய் விவசாயத்தில் நல்ல விலை கிடைக்கிறது. குறுகிய காலத்தில் அறுவடைக்கு தயாராகிவிடும் என்பதால் பெரும்பாலான விவசாயிகள் மேரக்காய் விவசாயத்தில் ஆர்வம் காட்டி வருகின்றனர்," என்றார்.

## <u>காய்கறி பயிர் பாதுகாப்பிற்குபுதிய தொழில் நுட்ப பயிற்சி</u>

திண்டுக்கல்:திண்டுக்கல் மாவட்ட தோட்டக்கலை துறையின் சார்பில் காய்கறி பயிர்களுக்கு புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்துவது தொடர்பான பயிற்சிகள் வேளாண்மை துணை இயக்குனர் பாஸ்கரன்

தலைமையில் நடந்தது. பாப்பனம்பட்டி, வெள்ளோடு, பெரியகோட்டை பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கலந்துகொண்டனர். ரெட்டியார்சத்திரம் மகத்துவ மையத்தில் நடைபெற்ற வயல்வெளி பயிற்சியிலும் விவசாயிகள் பங்கேற்றனர். வேளாண் அறிவியல் மைய முனைவர் உதயகுமார், அறிவியல் மைய பேராசிரியர்கள் பயிற்சியளித்தனர். தோட்டக்கலைத் துறை துணை இயக்குனர் (பொறுப்பு) ராமனாதன், வேளாண்மை அலுவலர் பொன்ராஜ், வேளாண்மை துணை அலுவலர்கள் ஜான்வில்லியம், உதவி வேளாண்மை அலுவலர்கள் ஜெயராஜ், முருகரசு, ஜெகநாதன், ஆஸ்பான் பங்கேற்றனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஒரு லட்சத்து 32 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற கீழணை, வீராணம் ஏரியில் இருந்து நாளை முதல் தண்ணீர் திறப்பு: ஜெயலலிதா உத்தரவு

சென்னை, கீழணை, வீராணம் ஏரியில் இருந்து நாளை (ஞாயிற்றுக்கிழமை) முதல் தண்ணீர் திறந்துவிட முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதன்மூலம், ஒரு லட்சத்து 32 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும். இதுகுறித்து முதல்-அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கீழணை, வீராணம் ஏரியில் தண்ணீர் திறப்பு

கடலூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள பாசன பகுதிகளுக்கு சாகுபடிக்காக கீழணை மற்றும் வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் திறந்துவிடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, கீழணை மற்றும் வீராணம் ஏரியிலிருந்து சாகுபடிக்காக 21-9-2014 முதல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். பாசன வசதிபெறும்

இதனால், கடலூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில்

உள்ள 1,31,903 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.